19.03.2025

அ.வ.எண். 119/2021

வா.சா.1 - மணி சேகர்

1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு சொத்து 265 காலையில் உள்ளது என்றால் ஆமாம். 265 நம்பர் காலையில் தென்புற பகுதியில் கிணறு உள்ளது என்றால் ஆமாம். அதில் 2 கிணறு உள்ளது, ஒன்று பயன்பாட்டில் உள்ளது, மற்றொன்று பயன்பாட்டில் இல்லை. அந்த இரண்டு கிணறும் தென்புறம் ஒன்றும், வடபுறம் ஒன்றும் உள்ளது. 265 நம்பர் காலையில் வாதி மற்றும் இரண்டு பிரதிவாதிகளுக்கு பூமி உள்ளது. தென்புறம் உள்ள கிணற்றில் தான் நீர்பாசனம் செய்யப்பட்டு வருகிறது. வடபுறம் உள்ள கிணறு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும், தென்புறம் உள்ள கிணறு பயன்பாட்டில் இல்லை என்றும், வடபுறம் உள்ள கிணறு தான் பயன்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி தென்புறம் உள்ள கிணற்றில் இருந்து தான் 265 நம்பர் காலையில் உள்ள நிலங்களுக்கு நீர்பாசனம் செய்யப்படுகிறது என்றால் ஆமாம். 265 காலையில் உள்ள கிணற்றில் இருந்து தான் பைப் லைன் மூலமாக வாதிக்கும், பிரதிவாதிக்கும் தண்ணீர் எடுத்து செல்லப்படுகிறது என்றால் ஆமாம், 2020 ல் இருந்து பைப் லைன் அமைத்து அவ்வாறு தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து நிலங்களும் தென்னந்தோப்பு உள்ளது என்றால் ஆமாம்.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/மணிசேகர்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur